# Administration in the Life of Ancient Tamils

**Dr. M. Thiruvasagam**
*Assistant Professor, Department of Tamil*
*S.T. Hindu College, Nagarkovil*

மலர்: 10

சிறப்பிதழ்: 1

மாதம்: அக்டோபர்

வருடம்: 2025

**P-ISSN: 2454-3993**

**E-ISSN: 2582-2810**

**DOI:**
https://doi.org/10.5281/zenodo.17346732

**Abstract**

*The ancient Tamil people managed their lives with a systematic approach. Their administrative skills were evident in aspects of human life, nature, and morality. A leader governed effectively by managing both the people of his region and the natural resources. A leader who did not interfere in others' households was considered a person of authority, while a woman in the household could exercise leadership within her domain. They maintained justice through moral principles and managed water resources efficiently. These practices reflect the administrative abilities of ancient Tamils and the leadership qualities of both men and women.*

***Keywords:*** *Literature, Ancient Tamils, Administration, Household, Leadership*

**References**

1. Sangam Literature, New Century Book House, 1st Edition, 2004.
2. Kalak Tamil Agamathi, South Indian SaivaSiddhanta Publications, Tirunelveli, 1st Edition, 1964.
3. Madurai Tamil Publications, I. Ma. Gopalakrishnan, 1st Edition, 1937 (Volume II).
4. Tamil Internet Educational Resources.
5. Tirukkural, G. Manikkavasagan, Uma Publications, 1st Edition, June 2012.

**Footnote**

1. The Society Depicted in Tirukkural, Kamatchi Srinivasan, Madurai University, p. 11.

# பழந்தமிழர் வாழ்வில் நிர்வாகம்

***முனைவர் மு. திருவாசகம்***
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை
தெ.தி. இந்துக்கல்லூரி, நாகர்கோவில்

***ஆய்வுச்சுருக்கம்***
*பழந்தமிழ் மக்கள் தங்கள் வாழ்வினை முறையாக நிர்வாகம் செய்தனர். மனிதர்கள், இயற்கை, அறம், பண்பாடு போன்றவற்றில் அவர்களின் நிர்வாகத்திறன் சிறப்புறவே அமைந்திருந்தது. அரசன் தன்நாட்டு மக்களிடமும் இயற்கையினையும் சிறப்புற நிர்வாகம் செய்து ஆட்சி நடத்தினான். பிறமனையாளை பார்க்காத தலைவனை பேராண்மை மிக்கவனாகவும் தன் இல்லத்தில் இருந்ததைக் கொண்டு இல்லோம்பும் பெண்ணாக தலைவி விளங்கியதையும் அறம் கூறும் அவையம் வைத்து தங்கள் வாழ்வில் நீதியைக் காத்ததும் நீரினை நன்மு றையில் நிர்வாகம் செய்த முறைமையும் அரசனின் நிர்வாகத் திறனும் புலனாகிறது.*
***திறவுச் சொற்கள்:*** *இலக்கியம், பழந்தமிழர், நிர்வாகம்,இல்லறம், அரசன், தலைவன், தலைவி*

## முன்னுரை

பழந்தமிழரின் வாழ்வியலை எடுத்துரைக்கும் இலக்கியங்கள் சங்க இலக்கியங்கள், சங்கம் மருவிய இலக்கியங்கள். இவற்றை, நாம் கற்பதன் வாயிலாக அக்கால மக்கள் எந்தெந்தச் சூழலில் எப்படியெல்லாம் வாழ்ந்தனர் என்பதும் அவற்றினை அடியொற்றி நாம் எவ்வாறு நம் வாழ்வினை மேன்மை நிலையில் கொண்டு செல்லலாம் என்பதும் விளங்கும். எனவேதான், இந்த இலக்கியங்கள் வாழ்வின் பொக்கிஷமாகக் கருதப்படுகின்றன. இந்த ஆய்வுக் கட்டுரையில் பழந்தமிழ் மக்கள் தங்கள் வாழ்வில் மேற்கொண்ட நிர்வாகம் சார்ந்த பதிவுகள் பதிவிடப்பட்டுள்ளன. இவற்றை, நாம் ஆய்வதன் மூலம் அவர்களின் நிர்வாகவியல் நுட்பத்தை உணர்ந்து, நம் வாழ்வில் அதனை ஒரு ஏணிப்படியாக எடுத்துக் கொள்ளலாம் எனவேதான், பழந்தமிழர் வாழ்வில் நிர்வாகம் என்னும் தலைப்பில்இவ்வாய்வுமேற்கொள்ளப்பட்டுள்ளது. இது, இன்றையக் காலக்கட்டத்திற்கு தேவையான இன்றியமையாத ஒன்றாகும்.

## நிர்வாகம் விளக்கம்

நிர்வாகம் என்பது ஒரு நிறுவனத்தின் அனைத்து செயல்பாடுகளையும் ஒருங்கிணைத்து, சீராக நடத்தி இலக்குகள் அடைவதற்கு உதவும் ஒரு செயல் முறையாகும்.

## நிர்வாகத்தின் முக்கியச் செயல்பாடுகள்

1. திட்டமிடல்
2. ஒழுங்கமைத்தல்
3. வழி நடத்துதல்
4. கட்டுப்படுத்துதல்

## நிர்வாகத்தின் முக்கியத்துவம்

### செயல் திறன்

நிர்வாகம் நிறுவனத்தின் செயல்பாடுகளை ஒழுங்கமைத்து செயல்திறனை அதிகப்படுத்துகிறது.

### நிலைத்தன்மை

ஒரு நிறுவனத்தை நீண்டகாலம் நிலை நிறுத்த நிர்வாகம் அவசியம்.

### பங்களிப்பு

நிர்வாகம் அனைத்து பங்குதாரர்களுக்கும் ஒரு பங்கு அளித்து அவர்களது நலன்களைப் பாதுகாக்கிறது.

**திறன்**

நிர்வாகம் திறமையான பணியாளர்களை கொண்டுவரவும் அவர்களின் திறமைகளை மேம்படுத்தவும் உதவுகிறது.

**நிர்வாகம் அகராதி விளக்கம்**

நிர்வாகம் என்பதற்கு பொறுப்பு, பராமரிப்பு, மேற்பார்வை, சுகிக்கை,முடிவு, உறுதி, பராமரித்தல், நிலைமை, சாதித்தல் என்று பல்வேறு பொருட்களை தருகிறது சென்னைப் பல்கலைக்கழக தமிழ் பேரகராதி.

நிர்வாகம் என்பதற்கு நிருவாகம், காட்சி, பிரத்தியட்சம் என்றும் நிர்வாகி என்பதற்கு நடத்துபவன், பராமரிப்பவன் என்றும் மதுரைத் தமிழ்ப் பேரகராதி விளக்கம் தருகிறது.

நிர்வாகம் என்பது பொறுப்பு, பராமரிப்பு, மேற்பார்வை, நடப்பிக்கை, பொருள் கொள்ளும் முறை,முடிவு, உறுதி, நிலைமை என்று கழகத்தமிழ் அகராதி பொருள் தருகிறது.

**தலைவன் நிர்வாகம்**

இல்லறம் என்பது ஆணும் பெண்ணும் இணைந்து, சேர்ந்து வாழ்ந்து, மக்கட் செல்வம் பெற்றுமண்ணில் தம் மக்கட் பரம்பரையை வேரூன்றி வாழ வைக்க, மக்களால் அமைக்கப்பெற்ற அமைப்பு ஆகும். இதில் இல்லறம் நடத்தும் ஆண்மகன் இன்னின்னவாறு தான் இருக்க வேண்டும் என்று பல நெறிமுறைகளை நம்முன்னோர்கள் வகுத்துள்ளனர். அந்நெறிமுறைகளுக்குக் கட்டுப்பட்டு இல்லறம் மேற்கொள்பவன் சிறந்த ஆண்மகனாக, சிறந்த குடும்பத் தலைவனாகப் பிறரால் மதிக்கப்படுகின்றான். அந்த நெறிகளையே, இலக்கியங்களாய் ஆங்காங்கே பதிவிடப்பட்டுள்ளன.

**பிறன்மனை நோக்காத பேராண்மை சான்றோர்க்கு**
**அறனொன்றோ ஆன்ற வொழுக்கு**

**குறள்-148**

பிறருடைய மனைவியை இச்சைக் கண்ணோட்டத்தோடு விரும்பிக் காணாதவனை, திருவள்ளுவர், பேராண்மை மிக்கவன் என்கிறார். நம் சமூக மரபிலும், இக்கொள்கையே வலுவாக எடுத்துரைக்கப்பட்டுள்ளது. மேலும், இந்த குணமுடைய ஆண் மகனே, தன்னை ஆராய்ந்துப் பார்க்கும் மேன்மை உடையவன் என்றும் எடுத்துரைக்கிறார். இதுவே, சிறந்த நிர்வாகச் சிந்தனை ஆகும்.

**ஆத்த மனையாள் அகத்தில் இருக்கவே**
**காத்த மனையாளைக் காமுறும் காளையர்**
**காய்ச்ச பலாவின் காயுண்ண மாட்டாமல்**
**ஈச்சம் பழத்துக்கு இடர்உற்ற வாறே**

**திருமந்திரம் – 61**

என்று திருமந்திரம், தன் மனையாளை தவிர பிறப் பெண்டிரைச் சேர்தலை தவறு என்கிறது. இதுவே, இல்லறம் நடத்தும் தலைவனின் ஒழுக்கமாகவும் அவனையே சிறந்த நிர்வாகத்திறன் கொண்டவன் என்றும் கூறுகின்றனர்.

**தலைவி நிர்வாகம்**

ஒரு பெண் திருமணம் ஆகும் வரை தன் தாயின் இல்லத்தில் செல்லப் பெண்ணாகவே வளர்கிறாள். திருமணம் ஆன பின் ஒரு குடும்பத்தையேக் கட்டிக் காக்கும் நிர்வாகப் பண்பு இயற்கையாகவே அவளிடம் வந்து விடுகிறது. திருமணத்தின் முன்பு வரை எதுவும் தெரியாத பேதையாக இருந்தவள் திருமணமானதும் அனைத்தும் அறிந்த பேரிளம் பெண்ணாக உயர்ந்து நிற்பது மங்கையர் குலத்திற்கே உள்ள குணம் போலும்.

குறுந்தொகையில்,செல்வக்குடியில் பிறந்த தலைவி, திருமணம் ஆனபின் தலைவனுடன் தனிமையில் வாழ்கிறாள். தன் இல்லத்தில் இருக்கும் உணவுப் பொருட்களை வைத்து தன் தலைவனுக்கு அன்புடன் உணவு சமைக்கும் பக்குவத்தை புலவர் இப்பாடலில் நயமாக எடுத்துரைத்து உள்ளார்.

***முளிதயிர் பிசைந்தகாந்தள் மெல்விரல்
கழுவுறுகலிங்கம்க ழூஅதுடீஇக்
குவளையுண் கண்குய்ப்புகை கழுமத்
தான் துழந்துதட்ட தீம்புளிப்பாகர்
இனிதெனக் கணவனுண்டலின்
நுண்ணி தின் மகிழ்ந்தன் றொண்ணுதல் முகனே***

***குறு–167***

புலவர் தலைவியின் விரலை மெல்விரல் என்றுக் கூறும் போதே, அவள் தன் தாய் வீட்டில் எவ்வளவு செல்லமாக வளர்ந்திருப்பாள் என்பதை அறிய முடிகிறது. அப்படிப்பட்ட பெண் பொருள் தேட சென்ற கணவர் வருவார், அவருக்கு பசிக்கும் என்று தன் வீட்டிலிருந்தப் பொருட்களை வைத்து சுவையாக மோர் குழம்பு சமைத்து வைக்கிறாள். அதனை, தன் கணவன் வந்ததும் அவனை உபசரித்து, விருந்துப் படைக்கிறாள். அவனும் தன் மனைவியிடன் அன்பு, பாசத்தில் உளம் மகிழ்ந்து, புன் முறுவல் பூண்டு,மகிழ்வுடன் இருவரும் இல்லறம் நடத்துகின்றனர். இதில், தலைவியின் இல்லற நிர்வாகத்திறன் தெளிவாக விளக்கப்பட்டுள்ளது.எந்நிலையிலும் தன் கணவனுடன் அன்புடன் இருப்பதைக் கொண்டு மகிழ்வுடன் வாழ வேண்டும் என்ற நிர்வாகப்பண்பு விளக்கப்பட்டுள்ளது. காலமாற்றத்தினால்,இக்காலத்தில் நாம் வீட்டில் உணவு இல்லையென்றால் உடனே உணவு விடுதிகளில் சென்று உணவு அருந்துகிறோம். இது, நம் உடல் நலத்திற்கு தீங்கினையை ஏற்படுத்தும். ஆகையால் நாம் இத்தகு நிர்வாக சிந்தனையைக் கொண்டு அன்புடன் இல்லத்தினைப் பேண வேண்டும்.

## மன்னர் நிர்வாகம்

மன்னன் என்பவர் தன்னைச் சுற்றி வாழும் மக்களைக் காத்து முறையாக ஆட்சி செலுத்தும் வல்லமை கொண்டவன். ஏனென்றால், நாட்டில் வாழும் அனைத்து மக்களுக்கும் சமஉரிமை, சமூகநீதி போன்றவற்றை வழங்கும் பெரும்பொறுப்பு அவனிடமே காணப்படுகிறது.

பண்டைய கால மன்னர்களின் செயல்திறன் அவர்களுடைய போர்த் திறமையிலும் ஆட்சி முறையிலும் விளங்கும் ஆட்சி அமைப்பு என்பது தனி மனிதனுக்கும் தேவை சமுதாயத்திற்கும் தேவை. பொருளாதாரத் துறை, அரசியல்துறை போன்ற பலத் துறைகளிலும் ஆட்சித்திறன் சரிவர அமைவது இன்றியமையாதது.

மன்னர் தன் நாட்டினை எவ்வாறு காக்க வேண்டும் என்பதை புறநானூற்றுப் பாடல்வரிகள் எடுத்துரைக்கின்றன.

***அருளும் அன்பும் நீக்கிநீங்கா
நிரயங் கொள்பவரோடு என்றாது காவல
குழவி கொள்பவரின் ஏம்புமதி
அளிதோதானே, அதுபெறல் அருங்குரைத்தே***

***புறம்–5***

இதில், நாட்டினை ஆட்சிசெய்யும் அரசனது நிர்வாகப் பண்புகள் குறிப்பிடப்பட்டுள்ளன. அதாவது, நாட்டினை ஆளும் மன்னன் தன் நாட்டில் வாழும் மக்களை குழந்தையை அரவணைக்கும் தாய்போல் போற்றிக் காக்கவேண்டும் என்னும் பண்பினை கொண்டிருக்க வேண்டும் என்று புறம் எடுத்துரைக்கின்றது.

இத்தகு குணத்துடன் நாடாளும் அரசன் இருந்தால், அந்நாட்டில் மக்கள் மகிழ்வுடனும் அன்புடன் வாழ்வர் என்பது திண்ணம். இக்குணத்தினை நாடாளும் அரசன் ஏற்று நடக்கவேண்டும்.

## அறம் கூறும் அவையம்

வழக்குகளை ஆராய்ந்து நீதிசொல்லும் மன்றம், அறம்கூறும் அவையம், இது பழந்தமிழர் நிர்வாகச் சிந்தனைக்கு பெரும் எடுத்துக்காட்டாக அமைகின்றது. ஏனென்றால் ஒருவரால் தன்னைத் தானே சரிவர செப்பம் செய்ய இயலா நிலையில், இம்மாதிரியான அறம் கூறும் அவையத்தின் மூலம் தன்னைத் தானே ஆராய்ந்து

புதுப்பித்துக்கொள்வதற்காகஇவ்அவையத்தினை அமைத்திருந்தனர். ஒருவரின் பிரச்சனைகளை ஆராய்ந்து அதற்கான சரியான தீர்வை வழங்குதல் என்பது குறைந்து வருகின்ற இக்காலக் கட்டத்தில், நாம் அனைவரும் இந்த அறம் கூறும் அவையம் பற்றி அறிந்துக் கொள்ள வேண்டிய கட்டாயத்தில் உள்ளோம். ஏனென்றால், பிரச்சனைக்கான தீர்வானது மிகத் துல்லியமாக தராசு போல் அமைய வேண்டுமென்றே நம் முன்னோர்கள் இத்தகு அவையத்தினை உருவாக்கியிருந்தனர். வலியன், நல்லவன், கெட்டவன், உறவினன் என்ற பேதமின்றி நல்லவரிடத்தும் கெட்ட துண்டு, கெட்டவரிடத்தும் நல்லதுண்டு என்ற பண்பினை அனைவரும் அறிய இது ஒரு சிறந்தவாய்ப்பாகும்.

***அச்சமும் அவலமும் ஆர்வமும் நீக்கி***
***செற்றமும் உவகையும் செய்யாதுகாத்து***
***ஞெமன்கோல் அன்னசெம்மைத்து ஆகி***
***சிறந்த கொள்கை அறம்கூறு அவையமும்***
***மதுரைக்காஞ்சி- 489- 492***

வெறும்நான்கேவரிகளால்நீதிமன்றத்திற்கான இலக்கணத்தை பழந்தமிழர் பதிவிட்டுள்ளனர். இதன் பொருளாவது, ஒருவன் தனக்கு நியாயம் வேண்டி இந்த அவையத்தை நாடிவரும்போது, அவர் மனதில் சில ஐயப்பாடுகள் எழும். அது, இவர் நமக்கு நடுவுநிலையுடன் தீர்ப்பு கூறுவாரோ கூறாரோ என்று அஞ்சும் பதட்டம். அப்படி வருகின்ற வரை, இவ்வவையத்தில் இருப்பவர் முதலில் அவரின் அச்சத்தைப் போக்கி, தோல்வியால் நெஞ்சில் எழும் அவரின் வருத்தத்தை நீக்கி, அவர்தம் நெஞ்சில் கருதின பொருள்மேல் தோன்றிய பற்றுஉள்ளத்தையும் நீக்கி, ஒரு கூற்றில் செற்றம் செய்யாமல் ஒரு கூற்றில் உவகை செய்யாமல் நெஞ்சினைப் பாதுகாத்து துலாக்கோல் போல நடுவுநிலைமையுடையவராய் அறம் கூறவேண்டும் என்கிறது.

மதுரைக் காஞ்சியின் இப்பாடல் வரிகளை மனதில் நிறுத்தி, ஒருவர் நீதி வழங்குவாரேயானால் மண்ணில் சிறந்த நிர்வாக சிறப்புடையோருக்கான எடுத்துக் காட்டாக திகழ்வார் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை. பழந்தமிழர் எடுத்துக் கூறிய இம்முறையினை கையாண்டு பிறருக்கான பிரச்சினைகளுக்கு தீர்வளிப்பதே சிறந்த நிர்வாகத்திறன்.

### நீர் பராமரிப்பு

மனிதனின் அடிப்படைத் தேவைகளுள் ஒன்று நீர். நீரின்றி அமையாது உலகு என்று வள்ளுவர் தன் குறளில் குறிப்பிடுகின்றனர். நீர் இன்றி உலகோ, உயிரோ வாழ முடியாது. அத்தகு நீரை முறைப்படுத்தும் தன்மையினை பழந்தமிழர் பெற்றிருந்தனர். இன்றளவும், நீரானது செல்வத்திற்கு நிகரானதாக கூறப்படுகின்றது. எனவே தான் நீரை வீணாக்ககூடாது என்கின்றனர் பெரியோர். அத்தகு நீரை பழந்தமிழர் நிர்வகித்த முறையை பட்டினப்பாலை பின்வருமாறு எடுத்துரைக்கின்றது.

***வான்பொய்ப்பினும் தான் பொய்யா***
***மலைத்தலை யகடற்காவிரி***
***புனல்பரந்து பொன்கொழிக்கும்***
***(ப.பாலை - 5-8)***

குடகில் தோன்றிய காவிரி ஆறு, சோழ நாட்டை வளப்படுத்த வற்றாத தன்மை கொண்டதாக காணப்படுகின்றது. இந்நதியின் குறுக்கே அணையை கட்டி நீரை தடுத்து நாட்டின் அனைத்துப் பகுதிகளுக்கும் கொண்டு சென்று நாட்டினையே வளம் கொடுக்கும் தன்மை கொண்டவனாக மாற்றியவன், கரிகாலன்.

இதன் மூலம் அரசன் என்பவன் மக்களை மட்டும் குழந்தை போல காக்காது தன் நாட்டின் இயற்கைச் சூழலையும் அதன் மூலம், மக்களின் வாழ்வில் ஏற்றம் ஏற்படுத்துபவனாகவும் இருக்க வேண்டும் என்பது புலனாகிறது. இன்றையக் கால கட்டத்தில் தண்ணீரை விலை கொடுத்து வாங்குகிறோம். ஏனெனில் மழைநீரை

நீர்வகிக்கும் திறன் குறைவாக காணப்படுவதேயாகும். இதிலிருந்து நாம் பழந்தமிழரின் நீர் மேலாண்மையை அறிந்து செயல்பட்டு நாட்டினை வளப்படுத்துவது நமது கடமையாகும்.

### முடிவுரை

இவ்வாறாக பழந்தமிழர் நிர்வாகத்தில் சிறப்புடன் விளங்கினர் என்பது புலனாகின்றது.

### துணை நின்ற நூற்கள்

1. சங்க இலக்கியம் - நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், முதல் பதிப்பு 2004
2. கழகத் தமிழ் அகராதி - திருநெல்வேலி தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் முதல் பதிப்பு 1964
3. மதுரைத் தமிழ் பேரகராதி - இ.மா. கோபாலகிருஷ்ண கோன், முதல் பதிப்பு 1937 (தொகுதி II)
4. தமிழ் இணையக் கல்விக் கழகம்
5. திருக்குறள் - ஞா. மாணிக்கவாசகன், உமா பதிப்பகம், முதல் பதிப்பு ஜூன் 2012

### அடிக்குறிப்பு

1. திருக்குறள் காட்டும் சமுதாயம் - காமாட்சி சீனிவாசன், மதுரைப் பல்கலைக்கழகம் பக்=11.